# கடலூர் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விபரம்

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மாண்புமிகு. முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டங்களில் ஒன்று. அரசின் செயல் திட்டத்தின்படி அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை 2005–க்குள்ளும் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை 2007–க்குள்ளும் ஒழிக்கப்பட வேண்டும்.

## குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு

தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் வழக்கு எண்.3295/2002–ல் வழங்கிய பரிந்துரைகளின்படி தமிழ்நாடு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலரின் நேர்முக கடித எண் 52464/யு1/2002–10 நாள் 5–2–2003 (எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் முகவரியிட்டது) ன்படி கடலூர் மாவட்டத்தில் சர்வசிக்ஷா அபியான் நிறுவனத்தால் மேற்க்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 60 குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாக கண்டறியப்பட்டது.

## மறுகணக்கெடுப்பு

சர்வ சிக்ஷா அபியான் நிறுவனத்தின் சர்வேயின் போது கண்டறியப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதாக தொழிலாளர் ஆணையர் கருதியதால் மீண்டும் ஒரு முறை கணக்கெடுப்புப் பணியை நடத்தி அறிக்கை தர சர்வசிக்ஷா அபியான் நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. மறுகணக்கெடுப்பு முடிந்த பின்னர் எஸ்.எஸ்.ஏ. நிறுவனத்தினர் கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 95 குழந்தைத் தொழிலாளர்கள உள்ளதாக அறிக்கை சமர்ப்பித்தனர்.

அவர்கள் கீழ்கண்டவாறு கீழ்கண்ட வட்டாரங்களில் காணப்பட்டனர்.

| வட்டாரம் **(Block)** | குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. அண்ணாகிராமம் | 20 |
| 2. புவனகிரி | 19 |
| 3. கீரைப்பாளையம் | 9 |
| 4. குமராட்சி | 26 |
| 5. நெய்வேலி | 3 |
| 6. பரங்கிப்பேட்டை | 18 |
| மொத்தம் | 95 |

சர்வசிக்ஷா அபியான் நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு அறிக்கைகளின்படி மேற்கூறிய 95 குழந்தைத் தொழிலாளர்களும் கீழ்கண்டவாறு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

| | |
|---|---|
| 1. கூலி வேலை | 26 |
| 2. விவசாய கூலி | 4 |
| 3. கட்டிடப்பணியில் சித்தாள்வேலை | 11 |
| 4. உலோகப்பொருள்களில் சிலை தயாரிப்பு | 2 |
| 5. ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப் | 5 |
| 6. ஆடு மேய்த்தல் | 4 |
| 7. மாடு மேய்த்தல் | 2 |
| 8. மரம் அறுக்கும் ஆலையில் வேலை | 1 |
| 9. பாத்திரங்களுக்கு ஈயம் பூசுதல் | 1 |
| 10. செங்கல் சூளை | 1 |
| 11. தையல் வேலை | 3 |
| 12. இறால் பண்ணை | 1 |
| 13. கேஸ் ஏஜென்சி | 1 |
| 14. கடைகளில் வேலை | 10 |
| 15. டீ ஸ்டால் வேலை | 6 |
| 16. ஹோட்டல் | 1 |
| 17. பிறர் வீட்டில் வேலை | 8 |
| 18. பிற வேலைகள் | 8 |
| மொத்தம் | 95 |

## தொழிலாளர் ஆணையர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்

இக்கணக்கெடுப்பு பணி குறித்தும் கடலூர் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிப்பதற்காக கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் முகாம் அலுவலகத்தில் 25–4–2003 அன்று சென்னை தொழிலாளர் ஆணையர் அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் தொழிலாளர் ஆய்வாளர், கடலூர் தொழிலாளர் அலுவலர், கடலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், கடலூர் மாவட்ட ''அனைவருக்கும் கல்வி'' இயக்கத்தின் உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணக்கெடுப்பு மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். மேற்கூறியவர்களைத் தவிர கடலூர் மாவட்ட தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு.த.சண்முகம், பொதுச்செயலாளர் திரு.எம்.எம்.நிஜாப்தீன், கடலூர் மாவட்ட உணவு நிறுவன உரிமையாளர்கள்

சங்கத்தலைவர் திரு.எஸ்.ரங்கராஜன் மற்றும் பண்ருட்டி, நெய்வேலி, விருத்தாசலம், சிதம்பரம், திட்டக்குடி போன்ற தொழில் வர்த்தக சங்க கிளைகளின் நிர்வாகிகள், பல்வேறு கடைகள், நிறுவனங்களின் உரிமையாளர்கள், உணவு நிறுவனங்கமளின் உரிமையாளர்கள் ஆகியோரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.தங்கசுவாமி கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றார். சென்னை தொழிலாளர் ஆணையர் தமது உரையில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தலின் அவசியத்தை வலியுறுத்தி பேசினார். வரும் 2005 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை அறவே ஒழிக்கப்பட வேண்டும். 2007 ஆம் ஆண்டிற்குள் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறை அறவே ஒழிக்கப்படவேண்டும் என்பதே அரசின் குறிக்கோள் என்றும் அக்குறிக்கோளை அடைவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தொழில் வர்த்தக சங்க நிர்வாகிகளும் கடைகள் நிறுவனங்களின் உரிமையாளர்களும், உணவு நிறுவனங்களின் உரிமையாளர்களும் தங்களது கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களில் குழந்தைத் தொழிலாளி எவரையும் பணியமர்த்துவதில்லை என்று உறுதி கூறியதோடு அரசின் அனைத்து திட்டங்களுக்கும் முழு ஒத்துழைப்பு தருவதாக உறுதியளித்தனர்.

## சட்ட அமலாக்க அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான பயிலரங்கம்

தொழிலாளர் ஆணையர் அவர்களின் 14–5–2003 தேதிய குறிப்பாணை எண்.ட்டி/1/53051/ 2002ல் அறிவுறுத்தியதற்கிணங்க குழந்தைத் தொழிலாளர் முறையை தடுக்கும் சட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்காக யுனிசெப் உதவியுடன் கடலூர் டவுன் ஹாலில் 30–5–2003 அன்று சட்ட அமலாக்க அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான பயிலரங்கம் ஒன்று நடைபெற்றது. அதனை கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ். தங்கசுவாமி துவக்கி வைத்தார்.

இப்பயிலரங்கத்தை துவக்கி வைக்க வருகை புரிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும் பயிலரங்கத்தில் பங்குபெற வந்த அனைவரையும் கடலூர் தொழிசாலைகளின் துணைத்தலைமை ஆய்வாளர் (சோ.&பா.) திரு.ஆர்.மருதையாபிள்ளை வரவேற்றார். சென்னை, குழந்தைகள் உரிமைகள் மற்றும் வளர்ச்சி மைய இயக்குநர் திரு.எஸ்.தாமஸ் ஜெயராஜ் குழந்தைத் தொழிலாளர் உருவாவதற்கான காரணங்கள் பற்றியும் குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்னைகள் பற்றியும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான யுக்திகளைப்பற்றியும் உரையாற்றினார். கடலூர் தொழிற்சாலைகளின் ஆய்வாளர் திரு.கே.சிதம்பரநாதன் ஆய்வுமுறைகள் மற்றும் நுட்பங்களைப்பற்றி எடுத்துரைத்தார். கடலூர் தொழிலாளர் அலுவலர் திரு.பி.கே.ஸ்ரீனிவாசன் தேசிய குழந்தைத் தொழிலாளர் கொள்கை பற்றி விரிவாகப் பேசினார். கடலூர் மாவட்ட ‘‘அனைவருக்கும் கல்வி’’ இயக்கத்தின் உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.என்.ஆடியபாதம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் கல்வி ஒரு முக்கிய கருவியாகச் செயல்படுவதை விளக்கிப்பேசினார்.

## மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆலோசனைக்கூட்டம் 5.6.2003

12.6.2003 அன்று குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிப்பது குறித்த ஏற்பாடுகளை செய்வதற்காக 5.6.2003 அன்று கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரு ஆலோசனைககூட்டம் நடத்தினார். அதில் கடலூர் தொழிலாளர் ஆய்வாளர், கடலூர் தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் கல்வித்துறையை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 12.6.2003 குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின பேரணி மற்றுமசிறப்புக்கூட்டம்

12.06.2003 அன்று காலை 9.30 மணியளவில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின பேரணியை கடலூர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு,எம்.எஸ்.சண்முகம் கொடியசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் பள்ளி மாணவர்களும் அரசு ஊழியர்களும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களும் 3000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டணர். பேரணியில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் குறித்த வாசகங்கள் அடங்கிய அட்டைகளை எடுத்துச் சென்றதோடு கோஷங்களும் எழுப்பப்பட்டன. கடலூர் பாரதி சாலையில் பெரியார் சிலை அருகிலிருந்து துவங்கிய பேரணி அதே சாலையில் உள்ள டவுன் ஹாலில் 10.30 மணியளவில் சென்றடைந்தது. பின்னர் டவுன் ஹாலில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. கடலூர் தொழிலாளர் அலுவலர் திரு.பி.கே.ஸ்ரீனிவாசன் அனைவரையும் வரவேற்று பேசினார். கடலூர் மாவட்ட வருவாய் அலுவலர் திரு,எம்.எஸ்.சண்முகம் துவக்க உரையாற்றினார் தமது உரையில குழந்தைத் தொழிலாளர் முறையினால் பிற்காலத்தில் அக்குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், அதனால் ஏற்படும் சீர்கேடுகளை எடுத்துரைத்து குழந்தைகள் கல்வி கற்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

கடலூர் தொழிற்சாலைகள் ஆய்வாளர் திரு.சிதம்பரநாதன் பேச்சாளர்களை குறித்த சிறப்புகளை அறிவித்து அவர்களை பேசுமாறு அழைத்தார்.

கடலூர் நகர அரிமா சங்கத் தலைவர் திரு.என்.எஸ்.ரெங்கநாதன் குழந்தைத் தொழிலின் தீமைகள் குறித்து எடுத்துரைத்தார். கடலூர் தொழிற்சாலைகள் துணைத்தலைமை ஆய்வாளர் திரு,இராமகிருஷ்ணன் குழந்தைத் தொழிலாளர் முறை எவ்வாறு ஏற்படுகிறது. அதை எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்து விரிவாக பேசினார்.

பின்னர் கடலூர் மவட்ட சமூக அலுவலர் திருமதி,கிரேஸ் அன்னபாய் குழந்தை தொழிலாளர் முறை களையப்படவேண்டியதின் அவசியம் பற்றியும் பெண் குழந்தைகளின் எதிர்காலம் அதனால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பது குறித்தும் விரிவாக உரையாற்றினார்.

ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் தனிக்கவிஞர் திரு. பழனிச்சாமி சுந்தர் குழந்தைத் தொழிலாளர் முறையின் பாதிப்புகள் குறித்து அழகான கவிதையொன்றினை வாசித்தார்.

கடலூர் மாவட்ட விரிவாக்க கல்வி பயிற்றுநர் திரு,சோமசுந்தரம் குழந்தைத் தொழிலாளர் முறையினால் ஏற்பட்ட கேடுகள் பற்றியும் எதிர்காலத்தில் அவற்றை முற்றிலும் களைவதற்குரிய வழிவகைகளைப் பற்றியும் பேசினார்.

மூத்த வழக்கறிஞர் திரு,ஆர்.பத்மநாபன் சட்டங்கள் இயற்றப்பட்டால் மட்டும்போதாது அவைதீவிரமாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இதுபோன்ற பேரணிகள் அவசியம் எனவும் அமலாக்க அதிகாரிகள் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புச்சட்டத்தினை தீவிரமாக அமல்படுத்தவேண்டும் எனவும் பொதுமக்களும் தங்களது முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கடலூர் அரசு பெரியார் கலைக்கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் திரு,அர்த்தனாரி குட்டிக்கதைகள் சொல்லி நகைச்சுவை ததும்ப பேசி குழந்தைத் தொழிலாளர் முறை முற்றிலும் களையப்படவேண்டியதின் அவசியத்தை பார்வையாளர்களின் மனதிலே நன்கு பதியவைத்தார்.

கடலூர் மாவட்ட ''அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்'' உதவித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு,ஆடியபாதம் சர்வசிக்ஷா அபியான் திட்டத்தில் இடையில் படிப்பை நிறுத்திய குழந்தைகளின் படிப்பு தொடர செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளியின் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகள் குறித்தும் பேசினார்.

கடலூர் மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஜேயராமன் இலக்கியங்களை மேற்கோள்காட்டி கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி பேசினார்.

கடலூர் மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திரு,பி.ஆர்.கோவிந்தன் நன்றி நவில பிற்பகல் 12.30 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பேரணி மற்றும் கூட்ட நிகழ்ச்சிகள் முழுவதும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டன 12.6.2003 தேதிய தினத்தந்தி மற்றும் தினமலர் நாளிதழ்களில் முழுபக்க சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

கடலூர் நகரத்தின் பிரதான இடங்களில் சுவர்களில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகங்கள் எழுதப்பட்டன. பேருந்துகள், லாரிகள், ஷேர் ஆட்டோக்கள், ஆட்டோக்கள், வேன்கள் ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் குறித்தும், குழந்தைத் தொழிலாளர் முறையில் உள்ள தீமைகள் குறித்தும் வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

12.6.2003 குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிப்பது குறித்தும் பேரணி மற்றும் கருத்தரங்கம் நடைபெறுவது குறித்தும் முன்னதாக உள்ளூர் கேபிள் டிவியில் விளம்பரம் செய்யப்பட்டது.

## தொழிலாளர் இணை ஆணையர் சென்னை மற்றும் துணை ஆணையர் II சென்னை தலைமையில் ஆலோசனைக்கூட்டம்

**22.8.2003** அன்று கடலூர் தொழிலாளர் அலுவலர் அலுவலகத்தில் சென்னை தொழிலாளர் இணை ஆணையர் திரு.எஸ்.மோகன் தலைமையில் துணை ஆணையர் II திரு.பி.ஜெயசிங்கன் முன்னிலையில் தொழில் நிறுவனங்களின் வேலையளிப்பவர்களிடம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒரு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் கடலூர் தொழிலாளர் ஆய்வாளர், தொழிலாளர் அலுவலர், தொழிலாளர் துணை மற்றும் உதவி ஆய்வர்கள், கடலூர் மாவட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தலைவர், அனைத்து மோட்டார் வாசன பணிமனை உரிமையாளர்கள் சங்கம், கடலூர் மாவட்ட இருசக்கர வாகன பணிமனை உரிமையாளர்கள் சங்கம், கடலூர் பான்பரி மார்க்கெட் அனைத்து வணிகர் சங்கம், திட்டக்குடி பொற்கொல்லர்கள் சங்கம், சிதம்பரம் நகை வியாபாரிகள் சங்கம், திட்டக்குடி தொழில் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கடைகள் நிறுவன உரிமையாளார்களும் தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

**23.8.2003** அன்று தொழிலாளர் இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியோர் செய்தியாளர்களிடம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்து அரசு எடுத்துவரும் பல்வேறு நடவக்கைகளை விளக்கி கூறினர்.

## கடலூர் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம் பதிவு செய்தல்

**5.9.2003** அன்று கடலூர் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம் பதிவு செய்வது குறித்தும் குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்பு குழுக்கள் அமைப்பது குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு ஆலோசனை கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரால் அவரது முகாம் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. அதில் தொழிலாளர் துறை மற்றும் கல்வித்துறையை சார்ந்த பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகவும், கடலூர் தொழிலாளர் ஆய்வாளரை உறுப்பினர் செயலாளராகவும் மற்றும் வருவாய்த்துறை, கல்வித்துறை, சமூகநலத்துறை, பொதுசுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித்துறை, வேளாண்மைத்துறை ஆகியவற்றின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ‘‘ கடலூர் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம்’’ **6.10.2003** ல் பதிவு செய்யப்பட்டது அதன் பதிவு எண்.**104/2003.**

## குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்பு குழுக்கள்

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள் எண்.5443/இ/2003 ஐ.எல். கடலூர் நாள் 22.9.2003ன் படி,

கிராம அளவில்

கிராம பஞ்சாயத்து தலைவரை தலைவராகவும்.

கிராம நிர்வக அலுவர்

ஊரக நலப்பணியாளர்

துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் ஆகியோரை உறுப்பினர்களாவும் கொண்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்பு குழுவும்.

தாலுக்கா அளவில்

வட்டாட்சியரை தலைவராகவும்

தொழிலாளர் உதவி ஆய்வாளரை உறுப்பினர் செயலாளராகவும்

தொழிலாளர் துணை ஆய்வாளர்

வட்டார வளர்ச்சி அலுவலர்

ஆரம்ப சுகாதார நிலைய அரசு மருத்துவர்கள்

அந்த வட்டத்தை சேர்ந்த கல்வித்துறையின் ஒரு அலுவலர்

வட்டத்திற்குரிய வேளாண்மை உதவி இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாவும் கொண்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்பு குழுவும் அமைக்கப்பட்டன.

இதேபோல் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் 25.9.2003 தேதிய செயல்முறை ஆணை எண்.இ/5443/2003 ஐ.எல்.கடலூர் ன்படி

மாவட்ட அளவில்

தொழிலாளர் ஆய்வாளர், கடலூர்.

தொழிற்சாலைகள் ஆய்வாளர், கடலூர்.

உதவி அரசு மருத்துவர், அரசு மருத்துவமனை கடலூர்.

BLESS தொண்டு நிறுவனம், கடலூர்.

CREED தொண்டு நிறுவனம்,சிதம்பரம்,

REDCE தொண்டு நிறுவனம், மேல்புவனகிரி.

REAL தொண்டு நிறுவனம், காட்டுமன்னார்கோவில்.

ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழ்ந்தைத் தொழிலாளர் தடுப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## குழந்தை தொழிலாளர் மறுவாழ்வு

சர்வ சிக்ஷா அபியான் நிறுவனத்தினர் கணக்கெடுப்பின்போது கண்டறிந்த 95 குழந்தைத் தொழிலாளர்களை அவர்கள் செய்யும் தொழிலிருந்து விடுவித்து பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்திரவின் படி 12.11.2003 முதல் 21.11.2003 முடிய சிறப்பு இயக்கம் ஒன்று நடத்தப்பட்டது. புவனகிரி அண்ணாகிராமம், கீரைப்பாளையம், நெய்வேலி குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் காணப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை பணியிலிருந்து விடுவித்து பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் பணியை செய்து முடிக்க ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தொழிலாளர் துறையிலிருந்து ஒரு அலுவலரையும், அனைவருக்கும் கல்வித்திட்டப் பிரிவிலிருந்து ஒரு அலுவலரையும் நியமித்து உத்திரவிடப்பட்டது. இவர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கிராமங்களுக்கு சென்று குழந்தை தொழிலாளர்களின் பெற்றோர்களை அணுகி குழந்தைத் தொழிலாளர்களை பணியிலிருந்து விடுவித்து அருகில் உள்ள பள்ளிகளில் மேற்படி குழந்தைத் தொழிலாளர்களை சேர்த்தனர். இவ்வகையில் 48 குழந்தைத் தொழிலாளர்களும் 14 வயது முடிவடைந்த 10 சிறுவர்களும் ஆக மொத்தம் 58 பேர் பள்ளிகள் மற்றும் இணைப்பு பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்படும் ஒப்பந்தகாரர்களிடம் உறுதிமொழி பெறுதல்

இவ்வலுவலகத்தால் கட்டுமானப் பணி மற்றைய இதர பணிகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கும்போது குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவதில்லை என்ற உறுதிமொழி பெற்ற பின்னரே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு உரிமம் பெற்றவர்கள் எவரும் குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவதில்லை என்பது ஆய்வினபோது உறுதிசெய்யப்பட்டது.

சட்ட அமலாக்கம்

இத்துறையின் தொழிலாளர் துணை மற்றும் உதவி ஆய்வாளர்கள் மேலும் தடுப்புக்குழுவினர் மாதம் இரண்டு கூட்டாய்வுகள் மேற்கொண்டு குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். **1.1.2003** முதல் **31.1.2004** வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழக்கு விவரங்கள் இத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1.1.2003 முதல் 31.3.2004 வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழக்குகள் விபரம்

| சட்டம் | ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகள் | ஒப்புதல் அளிக்கப்பட்ட இசைவு தீர்வு வழக்குகள் | ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகள் |
|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 | 2806 | 64 | 10 | 49 |
| 2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1958 | 603 | 27 | 1 | 21 |
| 3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் 1961 | 330 | – | – | – |
| 4, குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1986) | 3739 | 28 | – | 13 |

ஆய்வின்போது கண்டறியப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய விபரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டு மேற்படி குழந்தைத் தொழிலாளர்களை பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட நிர்வாகத்தின் இடைவிடாத முயற்சியினாலும் தொழிலாளர் துறை ஆய்வாளர்களின் தொடர்ச்சியான ஆய்வுகளாலும் கடலூர் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை என்ற நிலை உருவாகி வருகிறது, வெகுவிரைவில் கடலூர் மாவட்டம் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாவட்டமாக அறிவிக்கப்பட உள்ளது,

தொழிலாளர் ஆய்வாளர்,
கடலூர்.